**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**
**30.08.2019 ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை– திரு.பா.நாராயணன்.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

1) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 கோக்கால் காலனி பகுதியில் நடைபாதை அமைக்க பொது மக்கள் கேட்டு கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 கோக்கால் பகுதியில் கழிவு நீர் கால்வாய் அமைக்க பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

3) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 மவுண்ட பிளஸன்ட் சஜீவன் மில் பகுதியில் எஸ் எஸ் லாட்ஜ் செல்லும் சாலையில் பழுது ஏற்பட்டுள்ளது. அதனை சரி செய்ய பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

4) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 சுள்ளிக்குன்னு முதல் புத்தூர்வயல் வரை நடைபாதை அமைக்க பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

5) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 புத்தூர்வயல் பகுதியில் கழிவு நீர் கால்வாய் அமைக்க பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

6) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 மாக்கமூலா பணியர் காலனி பகுதியில் நடைபாதை அமைக்க பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

7) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15 கிரீன்வேலி பகுதியில் சிமென்ட் சாலை அமைக்க பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

8) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 எஸ் எஸ் நகர் பகுதியில் நடைபாதையுடன் கூடிய கழிவு நீர் கால்வாய் அமைக்க பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

9) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் குறித்து அறிக்கையை நகராட்சி ஆணையாரகம் சென்னை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியத்தலைவர், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு வளர்ச்சி பணிகள் குறித்து புகைப்படம் எடுத்து CD யில் பதிவு செய்து சமர்ப்பித்தமைக்கும் திரு.A.பாக்கியநாதன், பாக்கியா ஸ்டுடியோ அவர்களுக்கு தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| நாள் | தொகை |
|---|---|
| 29.03.2019 | ரூ.1960 |
| 28.06.2019 | ரூ.4030 |
| **மொத்தம்** | **ரூ.5990** |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

10) கூடலூர் நகராசி பிளாடிக் கழிவுகள் மேலான்மை விதி 2016 (Plastic Waste Management Rules 2016) ன் பிரிவு 5, 6 மற்றும் 7 ற்கிணங்க மறு சுழற்சி செய்ய முடியாத பிளாடிக் கழிவுகளை உரிய முறையில் அழிப்பதற்கும் குறித்த அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வகையில் நீலகிரி மாவட்ட அரசிதழில் பிசுரம் செய்யவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.4500/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

11) கூடலூர் நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலையே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான (ODF +) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பாராமரிக்கப்பட்டு வருகிறது என்பதை சுய உறுதி மொழி சான்றிதழுக்கு (Self Declarations) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

12) முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை முதிர்கன்னி மாற்றுத் திறனாளி மற்றும் DDWP உதவித் தொகை பெறுவதற்கு வறுமை கோட்டிற்கு கீழ் சான்றிதழ் வழங்க கோரி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் 3 நபர்களுக்கு மேற்படி பென்சன் பெறுவதற்காக மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.சகாப்தின்,<br>த/பெ.அப்துல் ரஹ்மான்,<br>1/431, O.V.H சாலை,மேல் கூடலூர் | – | மாற்றுதிறனாளி |
| 2 | திரு.அம்மாசி,த/பெ.பெருமாள்<br>21/341,தட்டக்கொல்லி,கூடலூர் | – | முதியோர் |
| 3 | திரு.சில்வர்ஸ்டார் ராஜா,<br>த/பெ.பெர்னாடு,2/422,கோக்கால்,<br>மேல் கூடலூர். | – | விதவை |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

13) கூடலூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக கூடலூர் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து செயல்ப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் கையாளுதல் (Secondary Storage and Transportation) செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

எனவே கூடலூர் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழுக்கு (Self Declaration) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

14) தமிழக அரசாணையின்படி G.O.(Ms)No.84 நாள் 25.06.2018. தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமிப்பு விற்பனை செய்பவர்களுக்கு அபராதம் விதித்தல் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.44555/2013/பி3 நாள் 04.04.2019 ன்படி துணை விதிகள் தயார் செய்து மாவட்ட அரசிதழில் உடனடியாக பிரசுரம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

15) இந்நகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் புள்ளி விபர குறிப்பாளரை பிளேஸ்நெட் கம்பியூட்டர் நிறுவனம் மூலம் பணியமர்த்தி நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.பி1 எண்.10327/2017 நாள்.28.06.2017 செயல்திறன் படைத்த பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.715/– என ஊதியம் நிர்ணயம் செய்து செப்டம்பர் 01.09.2018 முதல் 31.08.2019 வரை வழங்கப்பட்டு அதன் அனுமதி 31.08.2019 உடன் முடிவடைவதால் மேலும் 01.09.2019 முதல் 31.08.2020 வரை ஒராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

16) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 ல் அரசு உயர் நிலைப் பள்ளி பகுதியில் நடைமேடை அமைப்பதற்கு சட்ட மன்ற உறுப்பினர் தொகும் மேம்பாட்டு திட்டம் 2018–2019 ல் திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சி முகமை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி Proc.B.No.B23/2018 நாள் 30.07.2019 ல் உத்திரவு அளித்துள்ளார். மேற்படி பணிக்கு 20.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 ல் அரசு உயர் நிலைப் பள்ளி பகுதியில் நடைமேடை அமைத்தல் | 2.00 | திரு. ஜெயநாதன் | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |
| | | | திரு. வி.பி. ஜீவகன் | மதிப்பீட்டை விட 0.02 % அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.02 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. ஜெயநாதன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 0.02 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. ஜெயநாதன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

17) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 07 கோழிப்பாலம் செக்டேம் மற்றும் கோடமூலா பகுதியில் அமைந்துள்ள கிணறு பகுதியில் பொதுமக்கள் பயன்படுத்தி வரும் குடிநீர் பரிசோதனை செய்து தர தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தொகை ரூ.2800/– னை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

18) கூடலூர் நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் ஹெல்த் கேம்ப் உயர் மட்ட நீர் தேக்க தொட்டியை பராமரிப்பு பணி செய்ய வேண்டி இருப்பதால் குடிநீர் தொட்டியை சுத்தம் செய்து, வர்ணம் பூசும் பணிகளை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் இப்பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

19) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட இடங்களில் குடிநீர் திட்ட பணிகள் மற்றும் இதர பணிகள் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பணிகள் செய்து முடித்தமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான பாரதிதாசன் வணிக வளாகத்தில் மேற்கூரைகள் Zinc Sheet அமைத்தல். | 0.60 | திரு.ஸ்டீபன் சகாயராஜ் |
| 2 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆத்துார் செக் டாமில் இருந்து 300 மீட்டர் 110 MM HDP குழாய் அமைத்தல். | 7.80 | திரு.உசைன் |
| 3 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆத்துார் பகுதியில் GI Pipe, MS Pipe,DI Pipe மற்றும் GI Special, மேல் கூடலுார், உதகை சாலை, ஆஷா பவன், உதகை சாலை மற்றும் கே.கே.நகர் பாலம் வரை குடிநீர் குழாய்களை சரி செய்தல். | 5.90 | திரு.இ.ஜே.ஷாஜி |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட தோட்டமூலா காபி ஹவுஸ் வீடு, தட்டக்கொல்லி, மீனாட்சி மற்றும் இரும்பு பாலம் மோட்டார், விமலகிரி முதல் சுள்ளிக்குன்னு வரை பழுதடைந்த குடிநீர் குழாய் சரி செய்தல் | 2.40 | திரு.ஜெயநாதன் |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட கல்குவாரி பம்பு அரை, கோழிப்பாலம் செக்டேம் நெ.1,நெ.2, செம்பாலா தட்டக்கொல்லி, தொரப்பள்ளி பள்ளிவாசல் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மோட்டார்களை சரி செய்து எல்லன் செக்டேம் நெ.4 செக்டேம் ஆகிய பகுதிகளில் துார் வாருதல். | 4.90 | திரு.உசைன் |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட இரும்புபாலம் பகுதியில் சம்ப் அகற்றுதல் மற்றும் 40 HP மோட்டார், தொரப்பள்ளி ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய் அமைத்தல். | 3.70 | திரு.ராஜேஷ் |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

20) கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம், டெங்கு காய்ச்சல் ஒழிப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வினை நாடகம் மூலம் பொது மக்கள் அறியும் வகையில் அரசினர் மேல்நிலைப் பள்ளி மற்றும் நகராட்சி காந்தி திடல் ஆகிய இரண்டு பகுதிகளில் 31.07.2019 . தேதி நடத்தியதற்கான உத்தேச செலவினம் ரூ.13000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

21) இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் கனரக வாகனம் மற்றும் ஈப்பு வாகனங்களை இயக்க போதி பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்படாத நிலையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்யப்பட்டு 01.07.2018 முதல் 30.06.2019 வரை ஓராண்டு காலத்திற்கு அனுமதி பெறப்பட்ட நிலையில் அனுமதி காலம் 30.06.2019 உடன் முடிவடைவதால் 2019–2020 ம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் குறைந்த ஊதிய நிர்ணய அடிப்படையில் 5 ஓட்டுநர்களை 01.07.2019 முதல் 30.06.2020 வரை ஓராண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் (ESI மற்றும் EPF தொகைகளை செலுத்தவும்) ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளி பெறவும் அதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மாவட்ட ஆட்சித் தலைவர் , நீலகிரி மாவட்டம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.8431/2019 நாள் 08.07.2019 ன்படி 5 ஓட்டுநர்களை ஒப்பந்தஅடிப்படையில் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்படி ஒப்பந்தபுள்ளி கோரி பணியாளர்களை நியமனம் செய்துக்கொள்ளவும் அதற்கு ஏற்படும் செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி(நீலகிரி)